வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு ரூ. 1,210 இலட்சம்கொண்ட முதலீட்டுடன் 21 கைத்தொழில்களுக்கு ஒப்புதல் வழங்கியது, இதில் மூன்றில் இரண்டு பங்கு வெளிநாட்டு முதலீடாகும். இவற்றில் 11 நிறுவனங்கள், இரசாயனம், இறப்பர், பிளாத்திக்குத் துறையில் வெளிநாட்டு முதலீட்டின் 32 சதவீதத்துக்கும், 7 நிறுவனங்கள் புடைவைகள் ஆடைகள் துறையில் வெளிநாட்டு முதலீட்டின் மற்றொரு 27 சதவீதத்திற்கும் வகைகூறின. இவ்வாறு இக் கைத்தொழில்கள் உள்நாட்டுச் சந்தைகளையே பெரிதும் நாடின. உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட 2385 கைத்தொழில்களும் இதே நிலையைக் கொண்டிருந்தன என்று கூறலாம். இந்நிறுவனங்களில் கிட்டத்தட்ட 55 சதவீதமான அதாவது மொத்த முதலீட்டில் 43 சதவீதத்துக்கு வகைகூறுவன புடைவைகளும் ஆடைகளும் பிரிவைச் சேர்ந்தவைகள் ஆகும். முதலீட்டின் 27 சதவீதத்திற்கு வகை கூறும் 651 கைத்தொழில்கட்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. கொ. பெ. பொ. ஆ. குழுவிற்கு வெளியே ஒப்புதல்கள் வழங்கப்பட்ட கைத்தொழில்களும், புடைவை ஆடை ஆகிய துறைகளை ஒட்டியனவாகவே இருந்தன. வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்ட கைத்தொழில்கள் ஏற்றுமதி ஒட்டியனவாக விளங்க உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினால் ஒப்புதல்கள் வழங்கப்பட்ட கைத்தொழில்கள் பெரிதும் உள்நாட்டுச் சந்தையை ஒட்டியிருந்தன. உள்நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினால் ஒப்புதல் வழங்கப்பட்ட கைத்தொழில்கள் சில இரசாயனம், பொறித் தொகுதி, நுண் கருவிகள் ஆகிய துறைகளில் மேலும் முன்னேற்றகரமான தொழில் நுட்பத்தினைக் கொண்டனவாக உள்ளன.

கொழும்பு நகரிலும் அதை சுற்றியுமுள்ள பகுதிகளிலும் பெரும் கைத்தொழில்கள் மிகச் செறிந்திருப்பது குறித்து மேலிடங்கள் கவலை கொண்டுள்ளன. உற்பத்திப் பெறுமதியில் 90 சதவீதத்துக்கு வகை கூறும் தயாரிப்புக் கைத்தொழிலில் 80 சதவீதத்துக்கு அதிகமானவையும் தொழிற்படையில் 81 சதவீதமானவையும் கொழும்பு மாவட்டத்திலமைந்துள்ளதாக அளவீடு காட்டுகிறது. மாநில அடிப்படையில் பெருமளவு சமனான கைத்தொழிலை ஊக்குவிப்பதற்காகப் பல வகைப்பட்ட இறைச் சலுகைகளும், ஏனைய சலுகைகளும் திட்டமிடப்பட்டுள்ளன. ஆயினும் புதிய கைத்தொழிலின் அடித்தளம் சிறந்ததாகக் காணப்படவில்லை. அத்தகைய கைத்தொழில்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சலுகைகள் எல்லையளவு நன்மையே தரக்கூடும். எனவே, கொழும்பு மாவட்டத்துக்கு வெளியேயிருந்து முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான உள்ளமைப்புடன் கூடிய மாநில கைத்தொழில் நிலையங்களை அமைப்பதன்மூலம் கைத்தொழிலின் மாநிலப் பரவலை ஊக்குவித்தல் சிறந்ததாகும்.

**விலைகள்**

குடிமதிப்புப் புள்ளிவிபரத்திணைகளத்தினால் தயாரிக்கப்பட்ட கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்ட மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணும் மட்டுமே பொருளாதாரத்தில் விலை மட்டங்களிலேற்படும் மாற்றங்களைக் காட்டுவதற்காக வெளியிடப்படும் குறிகாட்டிகளாகும். முதற் கூறப்பட்டது சில்லறை விலைகளின் மாற்றங்களை அளவிடுவதுடன் முன்னைய இரு ஆண்டுகளிலும் ஒவ்வொன்றிலும் 1.2 சதவீதமாக ஏற்பட்ட அதிகரிப்புக்கெதிராக 1978 இல் 12.1 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இச் சுட்டெண்ணின் முக்கியமான குறைபாடு ஆண்டறிக்

கையின் கடந்த வெளியீடுகளில் எடுத்துக்காட்டப்பட்டது. மறு பக்கத்தில் மொத்த விற்பனை விலைச் சுட்டெண்[1] கடந்த ஐந்தாண்டின் 20.8 சதவீத[2] அதிகரிப்புடனெப்பிடின் 1978 இல் 15.8 சதவீத அதிகரிப்பைக் காட்டி, மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் விலை உயர்ச்சிகளையும் மிதமாக்கியது. 1959 இன் நிலையான விலைகளில் மொத்தத் தேசிய உப்பத்திக்கு, நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதமான, உள்ளடக்கமான விலைச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 16 சதவீதங்கொண்ட அதிகரிப்புக்கெதிராக 1978 இல் 15 சதவீதத்தால் அதிகரித்து முன்னைய ஊகித்தலை உறுதிப் படுத்தியது.

1978 இல் பொருளாதாரத்தில் பணவீக்கத்தின் வீதம் 15 சதவீதத்துக்கும் 16 சத வீதத்துக்குமிடையிலிருக்குமென்பதைக் குறிகாட்டிகள் காட்டுகின்றன. இது முன்னைய ஆண்டில் குறிக்கப்பட்ட 16 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையுள்ள வீதத்திலும் குறைவானதாகும்[2]. இது, செலாவணி வீதத்தின் கணிசமான தேய்வினால் விலைகள் மீது ஏற்பட்ட மேல் நோக்கிய அமுக்கம், 1977 நவெம்பரில் அதிக அளவான நுகர்வோர் விடயங்கள் மீதான விலைக்கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டமை, 1977 திசெம்பரில் தனியார்துறை, அரசதுறை ஊழியர்களின் கூலியிலேற்பட்ட அதிகரிப்பு, 1978 இல் அதிக அளவான குடியிருப்பாளர்களிடமிருந்து அரிசி, சீனி உதவு தொகைகளை அகற்றல், 1978 இல் மூன்று நிலைகளில் கோதுமை மா விலையின் மேல் நோக்கிய திருத்தம் என்பன காரணிகளினால் மேலதிகமாய் எதிரீடு செய்யப்பட்டதைக் காட்டுகிறது. இவை தாராளமாக்கலுக்குப் பின், அதிகரித்த இறக்குமதிப் பொருட்களின் வழங்கல், இறக்குமதி, பங்கீட்டு வர்த்தகத்தின் அதிகமான போட்டி, வர்த்தக உற்பத்திகளில் குறிப்பாக பொறிகளின் எண்ணிக்கையிலேற்பட்ட கணிசமான அதிகரிப்பின் காரணமாக போக்குவரத்து வசதிகளிலேற்பட்ட முன்னேற்றங்கள், முக்கியமான நுகர்வுப் பொருட்கள் குறிப்பாக அரிசியின் உயர்ந்த உற்பத்தி, மொத்த விற்பனை வரியும், பல விடயங்கள் மீதான இறக்குமதித் தீர்வையையும் குறைத்தல், பண நிரம்பலில் மிதப்படுத்தப்பட்ட அதிகரிப்பு (முன்னைய ஆண்டில் ஏற்பட்ட 29 சதவீத அதிகரிப்புக்கெதிராக 11 சதவீதம்) ஆகியன உள்ளடக்கப்பட்டன. எனினும் இரண்டு புள்ளி வீதங்கொண்ட பணவீக்கம் நிறைவு தருவதற்குக் காரணமாயிருக்க முடியாது. ஏற்றுமதித்தன்மை வாய்ந்த பொருளாதார வளர்ச்சியை அடைய விரும்பும் பொருளாதாரத்தின் முதல் நோக்கம் விலை ஏற்றங்களைக் கட்டுப்படுத்துவதேயாகும். எனினும், பன்னாட்டுச்சந்தைகளில் போட்டியடிப்படையில் ஒரு நாடு விளங்கினாற்றான் ஏற்றுமதித்துறையில் ஒரு முன்னேற்றத்தைக் காண முடியும்.

---


1) உற்பத்திப் பொருளொன்றுக்கான தொடக்கச் சந்தைப்படுத்தல் அவ்வுற்பத்தியின் விற்பனைத் தொடர்ச்சியில் முதலாவது முக்கிய வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படலாம் எனவே, மொத்த விற்பனை விலையென்பது உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தியானது விலையையும் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் இறக்குமதி விலைகளையுமே குறிக்கும். எனவே வழமையான உரையாடலில் குறிப்பிடப்படும் மொத்த விற்பனை விலைகளில் இருந்து இவை வேறுபடுவனவாகும்.

2) திருத்தப்பட்ட எண் தொகை.

## மொத்த விற்பனை விலைச் சுட்டெண்

1974 = 100


*1975ம் ஆண்டின், 1976 தொடக்கம் மாதாந்தமாக*




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம். மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## கூலிவீதச் சுட்டெண்கள்

1952 = 100




பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்.

மூலங்கள்: தொழில் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி.

**மொத்த விற்பனை விலைச்சுட்டெண்**

மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் காலாண்டுத்தரவுகளின் பகுப்பு இரண்டாம் காலாண்டில் 2.2 சதவீதத்தால் சுட்டெண் வீழ்ச்சியடைந்ததைக் காட்டுகிறது. மூன்றும் நான்காம் காலாண்டுகளில் சுட்டெண்களின் போக்கு எதிரிடையாக மாற்றமடைந்து முறையே 2.8 சதவீதத்தாலும், 5.8 சதவீதத்தாலும் அதிகரித்தன. உணவு, பல்வகைத் தொகுதிகள் ஆகியவற்றின் விலைகள் இரண்டாம் காலாண்டில் வீழ்ச்சியடைந்தன. மூன்றாவதில் புடைவைகள், காலணி, பல்வகை விடயங்கள் ஆகியவை தவிர்ந்த எல்லா விடயங்களினதும் விலைகள் அதிகரித்தன. நாலாம் காலாண்டில் இரசாயனம், இரசாயன உற்பத்திகள் தொகுதி ஆகியவை தவிர எல்லாத் துணை வகுப்புகளிலும் அதிகரிப்புக்கள் காணப்பட்டன.

விற்பனை விலைச்சுட்டெண் பற்றி மேலும் மேற்கொள்ளப்பட்ட பகுப்பு, புடவைகள், காலணி, தாள்உற்பத்திகள் இரசாயனமும் இரசாயன உற்பத்தியும், உலோகமல்லா உற்பத்திகள், உலோக உற்பத்திகள், எரிபொருளும் வெளிச்சமும் பல்வகைத் தொகுதிகள் ஆகியவற்றின் சராசரி விலைமட்டம் 20 சதவீதத்திலிருந்து 48 சதவீதத்தால் அதிகரித்தாகக் காட்டுகையில், உணவு, வெறியம் சார்ந்த குடிவகைகள், போக்குவரத்துக்கருவி, மின்சாரப்பொருட்கள், பொறி ஆகியன 5 சதவீதத்திலிருந்து 11 சதவீதம் வரையான மிதமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. அதே வேளையில் பெற்றோலிய உற்பத்திகளின் விலைகள் மாற்றமின்றியிருந்தன.

உணவுத் தொகுதியில் அரிசி, கோதுமைமா, சீனி ஆகியவற்றின் இறக்குமதி விலைகள் பெருமளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. ஏனைய குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள், மணிச் சோளம் (30 சதவீதம்) சோளம் (49 சதவீதம்) மாட்டிறைச்சி (27 சதவீதம்) முட்டைகள் (24 சதவீதம்) மீன் (32 சதவீதம்) மிளகு (25 சதவீதம்) கடுகு (55 சதவீதம்) மாசிக் கருவாடு (187 சதவீதம்) ஆகியவற்றிலேற்பட்டனவாகும். மிதமான அதிகரிப்புகள் வெளிச்சந்தை நெல் (13 சதவீதம்) குரக்கன் (18 சதவீதம்) கோழிஇறைச்சி (2 சதவீதம்) கருவாடு (18 சதவீதம்) உருளைக்கிழங்கு (6 சதவீதம்) தெங்கு (12 சதவீதம்) கொத்துமல்லி (11 சதவீதம்) பால் (5 சதவீதம்) கட்டிப்பால் (13 சதவீதம்) ஆகியவற்றில் காணப்பட்டன. இவ்வதிகரிப்புக்களின் தாக்கம், பாசிப்பயறு (19 சதவீதம்) பருவகாலமற்ற காய்கறிகள் (2 சதவீதம்) செத்தல் மிளகாய் (22 சதவீதம்) சின்னவெங்காயம் (8 சதவீதம்) தேயிலை (ஏறக்குறைய 15 சதவீதம்) கோப்பி (36 சதவீதம்) ஆகியவற்றின் குறைந்த விலைகளினால் ஓரளவுக்குக்கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக உணவு விலைகள் சராசரியாக ஏறக்குறைய 10 சதவீதத்தால் அதிகரித்தன.

உள்நாட்டுத் தொகுதிக்கான சுட்டெண் முன்னைய ஆண்டின் 9 சதவீதத்துடனொப்பிடின் 1978இல் 16 சதவீதத்தால் அதிகரித்தாக துறைவகைப்படியான பகுப்பாய்வொன்று காட்டுகிறது. 1977இல் 3 சதவீத வீழ்ச்சியைக் காட்டிய இறக்குமதித் தொகுதிக்கான துணைச்சுட்டெண் இவ்வாண்டில் 49சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. மறுபுறம் ஏற்றுமதித் தொகுதிக்கான துணைச் சுட்டெண் 1977இல் 59 சதவீத அதிகரிப்புக்கெதிராக நிலையாயிருந்தது. இதே போன்ற ஒப்பீட்டில் நுகர்வுத்தொகுதிக்கான துணைச்சுட்டெண் 12 சதவீதத்தால் அதிகரித்ததாகக் காணப்படுகிறது. இடைநிலைப்பொருட்களும், மூதலீட்டுப் பொருட்களும் தனித்தனியே 30 சதவீதத்தால் அதிகரித்தன,

**விலைக்கட்டுப்பாடுகளும், பங்கீடும்**

1977இன் பொருளாதாரச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக அதிகமான விடயங்களின் மீதான விலைக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. 1978இல், விலைக் கட்டுப்பாட்டிலிருந்து கொத்துமல்லி நீக்கப்பட்ட வேளையில் விலைக் கட்டுப் பாட்டின் கீழான விடயங்களின் சிறு பட்டியலில் எதுவும் சேர்க்கப்படவில்லை. கோதுமைமா, பாண், பருப்பு, பால், ஆகியவற்றின் கட்டுப்பாட்டு விலைகள் அதிகரிக்கப்பட்டன.

இன்றியமையாத உணவு விடயங்களின் பங்கீடு, வழங்கல் ஆகியவற்றிற் கான திருத்தப்பட்ட திட்டம் 1977 நவெம்பரில் அறிவிக்கப்பட்டு 1978 பெப் புருவரியிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது. புதிய திட்டத்தின் கீழ் பங்கீட்டி லான உதவுதொகை அடிப்படையில் பங்கீட்டிற்காக வழங்கப்பட்டஅரிசி ஏறக்குறைய மக்கட் தொகையின் அரைப்பங்கை உள்ளடக்கிய குறைந்த வரு வாய் (ஆண்டொன்றுக்கு ரூ. 3,600 பெறுபவர்கள்) பெறும் தொகுதிக்கு வரை யறுக்கப்பட்டது. இத்தொகுதிக்குள் சீனிப்பங்கீடு பிள்ளைகளுக்கு வரையறுக்கப் பட்டது. வெளிச்சந்தையில் சடுதியாகப் பெருமளவு அரிசி விற்பனைக்கு வந்தது. இவ்வருகை ஒரு திறமையான சந்தை நிலையை உருவாக்கியது. இச்சந்தையில் சராசரிதரமுடைய அரிசியின் விலை கிட்டத்தட்ட ரூ. 2.90க்கும் ரூ. 3.20க்கு மிடையில் நிலையாக இருந்தது.

நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், வெளிச்சந்தையொன்று இயங்குவதைத் தடுக்காமல் நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்குடன் கொண்டு வரப்பட்டது. தேசிய விலைகள் ஆணைக்குழு அரச தொழில் முயற்சிகளின் விலைகளை நிர்ணயிப்ப தோடு மட்டும் தனது பணியினைப் பொதுவாக நிறுத்திக் கொண்டது.

**கூலிகள்**

மத்திய வங்கியின் சுட்டெண்ணின் அளவுப்படி 1977 இல் 13 சதவீதத் தினால் உயர்வடைந்த அரச ஊழியர்களின் ஆகக்குறைந்த கூலிகள் 1978இல் மேலும் 15 சதவீதத்தினால் உயர்வடைந்தது. எழுதுவினைஞ, தொழில் நுட்ப ஊழியர்களின் பெயரளவிலான கூலிகள் 1977 இன் 1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பு நோக்குகையில் 12 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளது. ஒப்புநோக்கு கையில் கடந்த ஆண்டில் 2 சதவீத வளர்ச்சியைக் கொண்டிருந்த சிற்றூழியர் களினதும் பள்ளிக்கூட ஆசிரியர்களினதும் கூலிகள் முறையே 16 சதவீதத் தினாலும் 10 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன. 1977 டிசெம்பரில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட்டமையே பணக் கூலி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கான முக்கிய காரணமாகும். பணக் கூலிகள் முறையே கடந்த ஆண்டில் கணிசமானளவு வளர்ச்சியினைக் காட்டிய பொழுதும் 1978இல் அவை மாற்றமடையாதிருந்தன. 1978 நவெம்பரில் மிகவும் கணிசமானளவு கூலி அதிகரிப்பு அறிவிக்கப்பட்ட போதிலும் இது 1979 இலிருந்து மட்டுமே நடைமுறைக்கு வரும். பொருளாதாரத்தில் பணவீக்க வீதத்திற்கு இடம்விட்டு நோக்குகையில் இத்துறையில் சிற்றூழியர்களின் கூலிகள் தவிர்ந்த உண்மைக் கூலிகள் வீழ்ச்சியடைந்தது போல் காணப்பட்டன.